கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## முன்மொழிவுக்கான கோரிக்கைக்கான அழைப்பு (RFP)

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB) மூலம் ஏற்பாடு செய்யப்படும் Sri Lanka Expo 2026 இன் ஆய்வு, வடிவமைப்பு, மேம்பாடு, ஒருங்கிணைப்பு, ஏற்பாடு மற்றும் செயற்படுத்தலுக்கான ஆலோசனை நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல் மற்றும் பணியமர்த்தலின் பெறுகைக்காக தகுதி பெற்ற மற்றும் தொழில்முறை ஆலோசனை நிறுவனங்களிடம் இருந்து**

**ஒப்பந்த இல. EDB/PU/CPCC/2026/01**

1. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் இயங்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) 2026 ஜுன் 18 தொடக்கம் 21 ஆம் திகதி வரை சர்வதேச கண்காட்சி ஒன்றாக Sri Lanka Expo 2026 இனை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. ஏற்றுமதி சந்தைகளை விரிவுபடுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் மூலோபாய முயற்சிகளுக்கு அமைய, ஒரு முதன்மை நிகழ்வாகக் கருதப்படும் Sri Lanka Expo 2026, சர்வதேச அளவில் பார்வையை அதிகரித்தல், இலங்கை தொடர்பான சாதகமான எண்ணங்களை வளர்த்தல் மற்றும் இலங்கை ஏற்றுமதிகளுக்கான உலகளாவிய தேவையை ஊக்குவிக்கும் வகையில் இலங்கை உற்பத்திகள் மற்றும் சேவைகளை நேரடியாக அனுபவிப்பதற்கு சர்வதேச கொள்வனவாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் முக்கிய பங்குதாரர்களுக்கான உலகளாவிய தளம் ஒன்றை வழங்கும்.
2. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB) மூலம் ஏற்பாடு செய்யப்படும் Sri Lanka Expo 2026 இன் ஆய்வு, வடிவமைப்பு, மேம்பாடு, ஒருங்கிணைப்பு, ஏற்பாடு மற்றும் செயற்படுத்தலுக்கான ஆலோசனை நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல் மற்றும் பணியமர்த்தலின் பெறுகைக்காக தகுதி பெற்ற மற்றும் தொழில்முறை ஆலோசனை நிறுவனங்களிடம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB), அமைச்சரவை நியமித்த ஆலோசனை பெறுகைக் குழு (CPCC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகள் தற்போது கோரப்படுகின்றன.
3. ஆலோசகர்களின் தேர்வு மற்றும் பணியமர்த்தல் வழிகாட்டல் 2007 இல் குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் செலவு அடிப்படை தேர்வு (QCBS) மூலம் முன்மொழிவு நடத்தப்படும் என்பதோடு வழிகாட்டல்களில் வரையறுக்கப்பட்ட அனைத்து தகுதி பெற்ற ஆலோசகர்களுக்கும் திறந்துள்ளது.
4. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான ஆலோசனை நிறுவனம் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும். தகுதிபெற்ற ஆலோசனை நிறுவனத்திற்கான தகைமை அளவுகோலில் பின்வருவன உள்ளடங்கும். (மேலதிக தகைமை தேவைகள் பெறுகை ஆவணங்களில் தரப்பட்டுள்ளன).

   **a) பொதுவான அனுபவங்கள்**

   பாரிய அளவான சர்வதேச அல்லது தேசிய கண்காட்சிகள், வர்த்தகக் கண்காட்சிகள், மாநாடுகள் அல்லது ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளின் ஆய்வு, வடிவமைப்பு, ஏற்பாடு மற்றும் நிறைவேற்றல் உட்பட, நிகழ்ச்சி முகாமைத்துவத்தில், முன்மொழிவை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில், குறைந்தது 7 ஆண்டுகள் தொடர்ச்சியான மற்றும் நிரூபிக்க முடியுமான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **b) இதனையொத்த பண்புடைய ஒப்பந்தத்தில் பிரத்தியேக அனுபவம்.**

   ஆலோசகர் முன்மொழிவை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் கடந்த பத்து (10) ஆண்டுகளுக்கு, குறைந்தது இரு (02) பாரிய அளவான நிகழ்ச்சிகள் அல்லது அதற்கு இணையான அளவு சர்வதேச அனுபவத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஒப்பந்தத்தின் குறைந்தபட்ச மதிப்பு 40 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு (இ.ரூ.) குறையாது இருத்தல் வேண்டும் என்பதோடு முன்மொழிவு சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதிக்கு முன் கடந்த 10 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது செயற்பாட்டில் உள்ள ஒப்பந்தமாக இருத்தல் வேண்டும்.

   **c) நிதித் திறன்**

   i. ஆலோசனை நிறுவனம் (அல்லது கூ.மு./ கூட்டாண்மை ஒன்றாக இருக்கும் பட்சத்தில் முன்னணி கூட்டாளர்) கடந்த மூன்று ஆண்டு காலத்தில் குறைந்தது 120 மில்லியன் இ.ரூ. (அல்லது அதற்கு இணையான வெளிநாட்டு நாணயம்) சராசரி ஆண்டு புரள்வை பெற்றிருத்தல் வேண்டும்.

   ii. இந்தத் திட்டத்திற்கான ஆலோசகரின் ஏனைய கடப்பாடுகளை கழித்த பின்னர், ஆலோசனை நிறுவனம் 20 மில்லியன் இ.ரூபாவுக்கு குறையாத பணப் பாய்ச்சல் தேவையை பூர்த்தி செய்வதற்கு திரவச் சொத்துகள், கடன் வரம்பு அல்லது ஏனைய நிதி அம்சங்கள் போன்ற நிதி வழங்கலின் அணுகல் அல்லது கிடைக்கும் தன்மையை நிரூபித்தல் வேண்டும்.
5. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற ஆலோசனை நிறுவனங்கள் தொலைபேசி: 011-2300702, மின்னஞ்சல்: disna@edb.gov.lk கொழும்பு 02, நவம் மாவத்தை, இல. 42, NDB – EDB கோபுரம், கட்டம் 06, பெறுகை – உதவிப் பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம். பெறுகை ஆவணம் website https://www.srilankabusiness.com/announcement என்ற SLEDB இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், வாசிக்கும் நோக்கத்திற்காக மாத்திரமே பெறுகை ஆவணம் SLEDB இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக 25,000.00 இ. ரூபாவை செலுத்தி வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாள் ஒன்றில் எழுத்துமூலம் கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுடைய ஆலோசனை நிறுவனத்தின் மூலம் (மேலுள்ள 5ஆவது பந்தியில் உள்ள முகவரியில்) SLEDB இடமிருந்து ஆங்கில மொழியிலான பெறுகை ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
7. அசல் முன்மொழிவு உறையில் மூடப்படுதல் வேண்டும் என்பதோடு அதன் இடது பக்க மேல் மூலையில் "EDB/PU/CPCC/2026/01" – "இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB) மூலம் ஏற்பாடு செய்யப்படும் Sri Lanka Expo 2026 இன் ஆய்வு, வடிவமைப்பு, மேம்பாடு, ஒருங்கிணைப்பு, ஏற்பாடு மற்றும் செயற்படுத்தலுக்கான ஆலோசனை நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல் மற்றும் பணியமர்த்தலின் பெறுகைக்கான" முன்மொழிவு என்று குறிப்பிடுதல் வேண்டும்.
8. முன்மொழிவுகளை 2026 பெப்ரவரி 27 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் (மேலுள்ள 5ஆவது பந்தியில் உள்ள) முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும். 2026 பெப்ரவரி 27 ஆம் திகதி பி.ப. 2.00 இற்கு பங்கேற்க விரும்பும் ஆலோசனை நிறுவனத்தின் பிரதிநிதிகள் முன்னிலையில் முன்மொழிவு மூடப்பட்ட பின் முன்மொழிவுகள் உடன் திறக்கப்படும். அனைத்து முன்மொழிவுகளும் ஒரு மில்லின் இலங்கை ரூபாவுக்கு குறையாத (இ.ரூ. 1,000.000.00) வங்கி உத்தரவாத வடிவியில் விலைமனுப் பிணை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
9. முன்மொழிவுக்கு முந்திய சந்திப்பு 9ஆவது மாடி EDB இன் VIP அறையில் 2026 பெப்ரவரி 06 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு இடம்பெறும். அனைத்து ஆர்வமுடைய ஆலோசகர்களும் முன்மொழிவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்கலாம்.

**தலைவர்**
**அமைச்சரவை நியமித்த ஆலோசனை பெறுகைக் குழு (CPCC)**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB)**
**இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02**

**2026 ஜனவரி 26**